# மே - 25 - வியாழன்

## புனித 7ம் கிரகோரி – புனித பசிசி மரிய மதலேன்

**“நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் உங்கள் துக்கம் மகிழ்ச்சியாக மாறும்’ (யோவா.16:20)**

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 18 : 1 – 8

அக்காலத்தில் பவுல் ஏதென்சை விட்டுக் கொரிந்துக்குப் போய்ச் சேர்ந்தார். அங்கே போந்துப் பகுதியில் பிறந்த அக்கிலா என்னும் பெயருடைய ஒரு யூதரையும் அவர் மனைவி பிரிஸ்கில்லாவையும் கண்டு அவர்களிடம் சென்றார். அவர்கள், ”யூதர் அனைவரும் உரோமை நகரத்தை விட்டு வெளியேற வேண்டும்” என்ற கிலவுதியு பேரரசருடைய கட்டளைக்கு இணங்கி இத்தாலிய நாட்டைவிட்டு அண்மையில் அங்கு வந்திருந்தார்கள். கூடாரம் செய்வது அவர்களது தொழில். தாமும் அதே தொழிலைச் செய்பவராதலால் பவுல் அவர்களிடம் தங்கி வேலை செய்துவந்தார். ஒவ்வொரு ஓய்வுநாளும் அவர் தொழுகைக் கூடத்தில் யூதரிடமும் கிரேக்கரிடமும் பேசி அவர்கள் நம்பிக்கை கொள்ளச் செய்தார். சீலாவும் திமொத்தேயுவும் மாசிதோனியா விலிருந்து வந்தபோது பவுல் இறைவாக்கை அறிவிப்பதில் ஆர்வத்தோடு ஈடுபட்டிருந்தார் “இயேசுவே மெசியா என்று யூதரிடம் சான்று பகர்ந்துவந்தார். அவர்கள் அதனை எதிர்த்துப் பழித்துரைத்தபோது அவர் தமது மேலுடையிலிருந்த தூசியை உதறி, ”உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு, நான் அல்ல. இனிமேல் நான் பிற இனத்தாரிடம் செல்கிறேன்” என்று கூறினார். அவ்விடத்தை விட்டு விட்டுக் கடவுளை வழிபடும் தீத்து யுஸ்து என்னும் பெயருடைய ஒருவரின் வீட்டுக்குப் போனார். அவரது வீடு தொழுகைக் கூடத்தை அடுத்து இருந்தது. தொழுகைக்கூடத் தலைவரான கிறிஸ்பு என்பவர் தம் வீட்டார் அனைவரோடும் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டார். கொரிந்தியருள் பலரும் பவுல் கூறிய வற்றைக் கேட்டு கொண்டு திருமுழுக்குப் பெற்றனர்.

**பதில்பாடல் :** பிற இனத்தார் முன் ஆண்டவர் தம் நீதியை வெளிப்படுத்தினார்

## நற்செய்தி : யோவான் 16 : 16 - 20

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:, ”இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்.” அவருடைய சீடருள் சிலர், ””இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்” என்றும் ”நான் தந்தையிடம் செல்கிறேன்” என்றும் சொல்லுவதன் பொருள் என்ன?” என்று தங்களிடையே பேசிக்கொண்டனர். ”இந்தச் ”சிறிது காலம்” என்பது என்ன? அவர் பேசுவது நமக்குப் புரியவில்லையே” என்றும் பேசிக் கொண்டனர். அவர்கள் தம்மிடம் கேள்வி கேட்க விரும்பவதை அறிந்த இயேசு அவர்களிடம் கூறியது. ”இன்னும் சிறிது காலத்தில் நீங்கள் என்னைக் காணமாட்டீர்கள் மீண்டும் சிறிது காலத்தில் என்னைக் காண்பீர்கள்” என்று நான் சொன்னதைப் பற்றி உங்களிடையே சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள் அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள் ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்“ என்றார்.

**தியானம்:** இறைமகன் இயேசுக்கிறிஸ்துவின் உடனிருப்பும் அவரது பிரசன்னமும்தான் எமது வாழ்வில் உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டுவரமுடியும். இவ்வுலக இன்னல்கள் இடையூறுகள் மனிதர்கள் தரும் வேதனைகள், தடைகள் யாவும் இயேசுவின் பிரசன்னத்தின் முன்னால் தூசி போன்றவை. எனவேதான் நாம் சோர்வுறாது எமது பணியைத் தொடர இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் எமக்கு அழைப்பு விடுக்கின்றன. திருத்தூதர்களும் பவுலும் பலவிதமான தடைகள் மத்தியிலும் ஊர் ஊராகச் சென்று நற்செய்தியைப் போதித்தார்கள். இறைபிரசன்னம் அவர்களோடு கூட இருந்தது. இன்றைய நற்செய்தியும் இயேசுவின் இறப்பையும் உயிர்ப்பையும் உயிர்ப்பின் பின்னர் தூய ஆவியானவர் வழியாக தொடரும் இயேசுவின் பிரசன்னத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. இயேசுவின் இறப்பு சீடர்களிடையே கவலையை உருவாக்கும். ஆனால் அவரது உயிர்ப்பு சீடர்களின் கவலையை மகிழ்ச்சியாக மாற்றும். நமது வாழ்விலும் இன்பமும், துன்பமும் தவிர்க்க முடியாத நிலைகள். ஆனாலும் துன்பம் நிரந்தரமானது அல்ல. நாம் இறைபிரசன்னத்தில் வாழும் பொழுது அவை நம் சொல்லிலும், செயலிலும் மிளிரட்டும். பிறரின் நலனில் அக்கறை காட்டுவோம். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுப்போம். அப்போது இறைபிரசன்னம் நம்மோடு இருக்கும். நாமும் இயேசு தரும் மகிழ்ச்சியில் பங்குகொள்வோம்.